| | |
|---|---|
| | 35.00 |
| | 145.00 |
| | 170.00 |
| | 55.00 |
| லாதே | 130.00 |
| | 45.00 |
| | 105.00 |
| | 90.00 |
| | 65.00 |
| | 60.00 |
| | 55.00 |
| | 125.00 |
| | 90.00 |
| | 115.00 |
| | 95.00 |
| | 70.00 |
| | 85.00 |
| | 75.00 |
| | 85.00 |
| | 45.00 |
| | 75.00 |
| | 150.00 |
| | 80.00 |
| | 90.00 |
| | 95.00 |
| | 115.00 |
| | 70.00 |
| | 50.00 |
| | 60.00 |
| | 50.00 |
| | 70.00 |
| | 50.00 |

# கோடை மேகங்கள்

வெளியே புறப்பட ஆயத்தமாகிவிட்ட அனுபமா தங்கள் படுக்கையறையின் ஆளுயரக் கண்ணாடி முன் மீண்டும் ஒரு முறை வந்து நின்றாள். பின்னால் வாயிற்படியருகே ஓரகத்தி பத்மா வந்து நிற்பதைக் கண்ணாடி பிரதிபலித்தது.

''இதுதான் உங்கண்ணா சிங்கப்பூரிலிருந்து கொண்டு வந்த புடவையா?'' கேட்டபடி மிகவும் உரிமையுடன் உள்ளே வந்து புடவைத் தலைப்பைத் தொட்டுப் பார்த்தாள் அவள்.

''பேஷ்!... மேட் இன் ஜப்பான். பட்டுப்போல கைக்கு ரொம்ப மிருதுவா இருக்கே? அடுத்த வாட்டி உங்கண்ணா சிங்கப்பூர் போனா எனக்கும் இதுபோல் ஒண்ணு வாங்கிட்டு வரச்சொல். பணம் தந்துடறேன்...'' சிரித்தபடி மேலும் கீழும் அவளை ஆராய்ந்தாள்.

''ஆமாம், எங்கே வெளியில் இந்த வேளையில் புறப்பட்டாய்?''

தாடை இறுகப் பற்களைக் கடித்துக் கொண்டு ஆத்திரத்தை அடக்கிக் கொண்டாள் அனுபமா.

பத்மா வீட்டுக்குப் பெரிய மருமகள். அந்த நிலையில் மற்றவர்களிடமிருந்து மரியாதையையும் கேட்ட

கேள்விகளுக்கு உடனடியாகப் பதிலையும் எதிர்பார்ப்பவள். அவளிடம் என்றைக்குமே ஒரு அல்ப குணம். மற்ற ஓரகத்திகளின் அன்றாட அலுவல்களை கட்டாயம் அவள் அறிந்தாக வேண்டும். இல்லையென்றால் அவள் தலை வெடித்துவிடும் போன்றதொரு தவிப்பு ஏற்பட்டுவிடும் அவளுக்கு.

''என்ன சமைத்தாய்? ஆமாம். இந்த ஷர்ட்டை உன் கணவர் எந்தக் கடையில் வாங்கினாராம்? நேற்று உங்க வீட்டுக்கு வந்திருந்தாளே, அது உன் அத்தை பேத்தியா? என்ன படிக்கிறாள்? காலேஜ் முடித்துவிட்டாளா? கல்யாணத்துக்கு நிற்கிறாளா?'' இத்யாதி...

சாட்சிக் கூண்டில் நிற்பவரிடம், குறுக்குக் கேள்வி கேட்கும் வக்கீல்கள், இது விஷயத்தில் அவளிடம் தோற்றுப் போவார்கள். அத்தனை தொண தொணப்பு. ஆத்திரத்தை அடக்கிக்கொண்டு போலியாக முறுவலித்து பதிலளிப்பதைத் தவிர வேறு வழியே இருக்காது மற்றவர்களுக்கு.

தான் தெரிந்து கொண்டதை உடனே அடுத்தவர்களுக்குச் சொல்லி, சிறிது நேரத்தில் எல்லோரிடையேயும் பரப்பிவிடும் துர்க்குணமும் பத்மாவுக்கு உண்டு.

அடுத்த ஓரகத்தி அனிதா ரொம்பவும் கர்வி. அவளை விடப் படித்தவள்; போஸ்ட் கிராஜுவேட் என்ற மண்டைக்கனம். பெரிய இடத்துப் பெண் என்ற தகுதி வேறு. அல்பத்தனமாக, தானாக எதையும் கேட்க மாட்டாள். ஆனால் அவள் கேளாமலேயே அத்தனை பேர் வீட்டுச் சமைலறையில் இருந்து சண்டை விவரம்வரை அவளுக்குச் சங்கதி வந்துவிடும்.



மூன்றாமவள் ரம்யா பம்பாய்க்காரி. தான் உண்டு தன் வேலை உண்டு என்ற தனிவட்டத்தினுள் ஒதுங்குபவள். தப்பித் தவறி செய்திகள் ஏதும் காதில் பட்டு விட்டாலும் காட்டிக் கொள்ளவே மாட்டாள் நாசூக்குக்காரி.

நான்காவது ஓரகத்தி நளினி பெரிய வாய்ச்சாலகி, தளுக்குப் பேச்சில் அவளிடம் மயங்காதவர் யார்? அத்தனை சர்க்கரைக் கட்டியான பேச்சு.

''நீங்க நம்பவே மாட்டீங்க அக்கா. இப்பத்தான் உங்களைப் பத்தி நினைச்சேன். நீங்களே வந்தீங்க. நூறு ஆயுசு'' கூசாமல் பொய் புரளும். தேவைப்பட்டபோது ஒட்டிக் கொள்வாள். வேண்டாதபோது தப்பித் தவறிக்கூட ஜன்னலருகில் நிற்க மாட்டாள். சுய நலத்தின் மறு அவதாரம் அவள்.

வைதேகி காலனியில் கடைசி வீட்டுக்காரி அனுபமா. வெளியே செல்லவேண்டுமானால் அத்தனை பேரையும் தாண்டித்தானே போக வேண்டும்?

அவள் மூச்சுவிட்டால்கூட மற்ற நாலு ஓரகத்திகளுக்கும் தெரிந்து விடும். அத்துடன் மட்டுமா? பஞ்ச பாண்டவர்களைப்போல ஐந்து பிள்ளைகளைப் பெற்றுவிட்டு கணவனிடமிருந்து பேரன் பேத்திகள் வரை இரண்டு டஜன் ஆசாமிகளை ஆட்டிப் படைத்து அல்லி தர்பார் நடத்தும் அலமேலு அம்மாள் - மரியாதைக்குரிய அவர்களது மாமியார்தான். அந்தக் காலனியில் முன் வீட்டில் தங்கி வரும் காவல் தெய்வம்.

வராந்தாவை ஒட்டிய ஆபீஸ் அறைக்குள்ளே சுழல் நாற்காலியில் உட்கார்ந்தபடி அவர்களது வியாபார சம்பந்தப்பட்ட பைல்களை ஆராய்ந்து கொண்டு, ஜன்னல்

வழியே தெருவையும் பார்த்தபடி உட்கார்ந்திருக்கும் அந்த அம்மாளின் கண்களுக்கும் கழுத்திற்கும் எந்த விஷயமும் தப்ப முடியாது.

ஃபைலை வைத்துவிட்டு எழுந்து வராந்தாவில் வந்து நின்றுவிடுவாள்.

''பதைப்பதைக்கிற வெய்யிலில் கடைக்கா கிளம்பி இருக்கே?''

''வீட்டை நன்றாகப் பூட்டினியா?''

''காஸ் அடுப்பைக் கவனிச்சு மூடித்தானே கிளம்பி இருக்கே?''

''சாவியை மேஜை மேல் வச்சுட்டுப்போ. வழியிலே எங்கேயாவது தொலைச்சிட்டு வந்து நிக்காதே.''

''சினேகிதிகளைப் பார்க்கவும்; கடைத் தெருவுக்குப் போகவும் ஆபீசிலிருந்து காருக்கு டெலிபோன் பண்ணினயா இல்லையா? அதுதான் சரி. அங்கே வியாபாரம் கெட்டுப் போகும். டிரைவர்கள் ஆபீஸ்ல செய்ய வேண்டிய வேலையை விட்டுட்டு வரது ரொம்ப தப்பு. இஞ்சி லாபம் மஞ்சளிலேன்னு போயிடும். பேசாமல் ஆட்டோ இல்லாட்டி டாக்ஸி எடுத்துக் கொண்டு போ.''

படபடவென்று பேசுவாள். அறுபது வயதைத் தாண்டி விட்ட கிழவி. ஐந்து பிள்ளைகளைப் பெற்றுவிட்ட மகராசி. அவள்தான் அத்தனை பேருக்கும் ராணியாக, கணவனைப் பின்னால் தள்ளிவிட்டு தானே முன்னால் நின்று எல்லாவற்றையும் சமாளிக்கும் சூரப்புலி.



''வீடு வாசல்னு நல்ல இடம். பையன் பார்க்க லட்சணமாகவே இருக்கான். சொந்த வியாபாரம். பெரிய சம்பந்தம், இவன்தான் வீட்டின் கடைக்குட்டி.'' அப்பா அந்த வரனைப் புகழ்ந்தபோது அவளுடைய ஒன்றும் தெரியாத அத்தைகூட ஒரு கேள்வி கேட்டு வைத்தாள்.

''ஆஸ்திக்கு ஒரு பிள்ளை, ஆசைக்கு ஒரு பொண்ணுன்னு நமக்கிருக்கிறது. இதைக் கொண்டுபோய் கழுத்து மட்டும் சம்சாரத்திலே தள்ளணுமா?''

அப்பா வக்காலத்து வாங்கியவர் போலப் பேசினார். ''நுங்கம்பாக்கத்திலே பெரிய இடம் வாங்கிப் போட்டிருக் காங்களாம். இப்ப சத்தியாக் கூட்டுக் குடும்பமா இருக்காங்க. பிள்ளைகள் எல்லோருக்கும் தனித் தனியாக வீடு கட்டி வைச்சுடப் போறாங்களாம்.''

வரதட்சணை, சீர் இத்யாதிகளுடன் ரிசப்ஷன், கச்சேரி வகையான சிறப்பு அம்சங்களுடன் தடபுடலாகத் தான் நடந்தது அவள் கல்யாணம். ஆயிரக்கணக்கில் பணம் கரைந்தது. மற்ற மருமகள்மாரின் பிறந்த வீட்டில் போட்ட நகைகளின் ஜாபிதாவைக் காட்டி, கிட்டி போட்டு வசூல் செய்யும் கிஸ்திக்காரனைப் போல் அலமேலு அனுபமாவுக்குச் செய்யச் சொல்லி விட்டாள்.

மாமனார் சஞ்சீவி வாயே திறவாத சாது மனிதர். சுருங்கச் சொன்னால் அப்பாவி. பெயருக்கு வீட்டு எஜமானன். ஆனால் கம்பெனி நிர்வாகத்திலிருந்து வீட்டு மளிகைச் சாமான்வரை அலமேலு அம்மாளே உண்மையான எஜமானி. அந்தம்மாள் இட்டதே சட்டம்.

சமீபத்தில் மாமனார் சஞ்சீவி தமக்கு உடம்பு முடியவில்லை; தலைவலி, பல்வலி எனப் பல

காரணங்களைக் காட்டி நாளுக்கு ஒருவித நோயுடன், மாடியிலிருந்த தமது அறையே கதியாக இருந்துவிட்டார். வேளைக்குச் சாப்பிடுவது, தூங்குவது, பிள்ளைகள், மாட்டுப் பெண்கள் - பேரன்களை ஒட்டுமொத்தமாகச் சந்திக்கும் போது ஊஞ்சலில் ஆடியபடியே ஒரு போலிப் புன்னகையை வீசிவிட்டு, ''எல்லோரும் க்ஷேமமா இருங்கோ'' என்று ஆசீர்வதித்து விட்டு மாயமாகி விடுவது என்ற ரீதியில் வாழ்ந்து கொண்டிருந்தார்.

ஒரே வீட்டில் நான்கு ஓரகத்திகள் - அவர்களது நண்டும் சிண்டுமான குழந்தைகளுடன் கும்பலாக வாழ ஆரம்பித்தபோது வாழ்க்கை அனுபமாவுக்கு ஒரே நரகமாக இருந்தது. யார் சமைப்பது? யார் வேலைக்காரியுடன் சேர்ந்து வீட்டைச் சுத்தப்படுத்துவது? யார் சாப்பாடு போடுவது? யார் குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்பச் செய்வது?

அன்றாட வேலைகளை மருமக்கள்மாருக்கு அலமேலு விநியோகித்து விட்டிருந்தாள்.

அத்தனை பெரிய கூடத்தில் சமைக்கும் வேலை ஒருசில நாட்கள் அனுபமாவின் தலையில் விழுந்துவிடும் போது அவளுக்கு 'ஓ'வென்று அழ வேண்டும் போல இருந்தது.

''இது என்ன வீடா? அல்லது ராணுவக் கூடமா?'' மனம் குமைந்தாள்.

நுங்கம்பாக்கத்திலிருந்த அந்தப் பெரிய மனையில் வீடு கட்டத் தொடங்கிய போதுதான் அப்பாடா என்ற நிம்மதி அவளுக்கு ஏற்பட்டது. ஆனால் அதுவும் கொஞ்ச காலத்துக்குத்தான்.



''வைதேகி காலனி'' என்ற பெயர்ப் பலகை தாங்கி, சுற்றுச்சுவர், கூர்க்கா சகிதம், உள்ளே அழகான தோட்டத்துக்குள் அடுக்கடுக்காக ஐந்து பிள்ளைகளுக்கும் ஒரு துளி வேற்றுமையின்றி வீடுகளைக் கட்டி முடித்த அலமேலு, தானும் தன் கணவரும் வசிக்க கேட்டருகே தனக்கென்று ஒரு சிறு வீட்டையும் கட்டி விட்டாள்.

ஐந்து வீடுகளிலும் நடக்கும் அத்தனைக் காரியங்களையும், வாயில் அறை ஜன்னல் வழியே பார்த்தபடி தன் ஐந்து பிள்ளைகள் அவர்களது மனைவிகள் என்று தன் ஆட்சியின் ஆதிக்கத்தில் அடக்கி ஆண்டு கொண்டு, மகாராணி போலக் கொலு வீற்றிருந்தாள்.

கணவனிடம் பேசி அங்கிருந்து கழற்றிக் கொண்டு வேறு இடத்தில் வாழலாமோ என்றால் அது நடக்காத காரியமாக இருந்தது.

அவள் கணவன் அரவிந்த் பெரிய அம்மாக்கோண்டு.

''இந்தாடா பிரசாதம்! கற்பகாம்பாள் கோவிலுக்குப் போயிருந்தேன்'' என்று அலுவலகத்துக்குக் கிளம்பும் மகனை ஒரே அதட்டலில் காரிலிருந்து இறங்கச் செய்வாள். தன் கையால் அவன் நெற்றியில் விபூதி இட்டுக் குங்குமம் வைத்து விடுவாள். தீபாவளி, பொங்கல் போன்ற நாட்களில் அத்தனை பேரும் ஒட்டுமொத்தமாக அந்த முதல் வீட்டில் கூடி பெற்றவர்கள் காலில் விழுந்து ஆசிபெற்று, பந்தி போஜனம் செய்தாக வேண்டும். பண்டிகை ஜவுளி எடுப்பதை மேற்பார்வை இடும் வேலைகூட அலமேலு அம்மாளுடையதே.

''இது பத்மாவுக்கு... அவள் மாநிறத்துக்கு இந்தக் கலர் சரியா இருக்கும்.''

''இந்த வேட்டி கணேசுக்கு...'' இப்படி வரிசையாக எடுத்து வைப்பாள்.

ஒரு சிறு தவறு நடந்து விட்டால் கூடப்போதும். எல்லோரையும் தன் வீட்டு முன்னறையில் கூட்டி வைத்து ஞாயிற்றுக்கிழமை காலை ஒரு 'கோர்ட் மார்ஷல்' உருவாகிவிடும்.

'பள்ளிக்கூடம் போன பெண் ஏன் நாழி கழிச்சு வந்தாள் என்று' ஒரு வார்த்தை கேட்க பெத்தவள் உனக்குப் புத்தி இல்லையா?'' மருமகளிடம் எல்லார் முன்னிலை யிலும் சீறுவாள்.

''பஸ் தவறிப் போச்சா? எப்படித் தவறும்? சிநேகிதிகளுடன் பேசிக் கொண்டு, நாலு நாழி காலேஜில் என்ன வேலை? நீதான் புதுசாகக் காலேஜ் படிக்கிறவளோ, நானும் அங்கே படிச்சவதான்'' பேத்தியை எல்லார் முன்னிலையிலும் மிரட்டி விட்டு, தான் படித்த காலத்துப் பிரதாபங்களை ஆரம்பிப்பாள்.

அலமேலு அந்தக் காலத்துப் பட்டதாரி. ஆங்கிலத்தைக் கடித்து விழுங்கிப் பேசக் கூடிய சாமர்த்தியக்காரி. அப்படிப்பட்ட மாமியார் அலமேலு கண்களில் படாமல் வெளியே போய் விடுவது என்பது சாத்தியமில்லை.

தோள் பையுடன் புறப்பட்டாள் அனுபமா. ஜன்னல் வழியே திரை இடுக்கின் ஊடே தன்னை ஓரகத்திகள் கவனிக்கிறார்கள் என்ற உணர்வில் குடையைப் பிரித்துக் கொண்டு நடந்தாள்.

மாமியார் அலமேலு வராந்தாவிலே காலை பத்திரிகையுடன் சாய்வு நாற்காலியில் உட்கார்ந்திருந்தாள்.



அனுபமா தானாகவே முந்திக் கொண்டாள்.

''அத்தை, காசாம்பூ கருணை இல்லத்தில் ஆண்டு விழா.''

அலமேலு கீழ் உதட்டைக் கடித்தபடி மருமகளை ஏற இறங்கப் பார்த்தாள்.

பிரபல நிறுவனமான பங்கஜா பிளாஸ்டிக்ஸின் வீட்டுப் பெண் அனுபமா. இப்படி ஒரு சமூக சேவைகளுக்குள் கலந்து கொள்வது ஒரு விதத்தில் அவர்களது அந்தஸ்துக்கு மெருகு ஏற்றுவது போலத்தான். மூக்குக் கண்ணாடி வழியே உற்றுப் பார்த்தாள்.

மாமியாரின் கூரிய கண்கள், தனது உதட்டுச் சாயம், பவுடர் பூச்சு, ரவிக்கைக் கழுத்து ஆகியவற்றை ஆராய்வதை உணர்ந்தவள், கூசியபடி அண்ணாசாலையி லிருந்து அலுவலக கார் வரும்வரை முள் மீது அமர்ந்திருப்பது போல் அமர்ந்திருந்தாள்.

சில நிமிஷங்களில் வண்டி வந்து வாயிலில் நின்றது. ''விழா நாள், நாலு பேர் வந்திருப்பாங்க, அதனால் இன்னிக்குக் காரில் போய் விட்டு வரலாம். வேறு சமயமானால் அங்கே ஆட்டோவில் போனால் போதும். பெட்ரோல் விற்கும் விலையில்...'' என்று மருமகளை வழி அனுப்பி வைத்தாள்.

காரில் அனுபமா ஏறிக் கொள்ளும் முன் கடைசி எச்சரிக்கையும் பின்னாலேயே அலமேலுவிடமிருந்து பறந்தது.

''அந்த இல்லத் தலைவி சிவகாமி ரொம்பக் கெட்டிக்காரி. உன்னை ஆகாசத்துக்குப் புகழ்ந்து விடுவாள்.

அவள் அடிக்கும் வேப்பிலையில் மயங்கி, ''டொனேஷன்'' என்று எதிலாவது கையெழுத்துப் போட்டு மாட்டிக் கொள்ளாதே. என் மாமியாரை வந்து நேரே கேட்டு வாங்கிக்கோன்னு பளிச்சின்னு சொல்லிவிட்டு வா.''

காது மடல்கள் சூடேற, லேசாக இருமிய டிரைவரிடம் ''திருவான்மியூர் காசாம்பூ இல்லத்துக்கு'' என்று கூறியபடி கோபத்துடன் அமர்ந்தாள் அவள்.

புதிதாக நிறுவப்பட்ட இல்லத்துக்கு முன்புறத்தில் அடர்த்தியாக வளர்ந்திருந்த மரத்தின் நிழலில் தோரணங்கள் தொங்கவிட்டதொரு மேடையில் நாற்காலிகள் போடப்பட்டிருந்தன.

ஒலிபெருக்கியில் தலைவியை சிவகாமி வரவேற்றுக் கொண்டிருந்த சமயம், அனுபமா போய்ச் சேர்ந்தாள். அப்படிப் பிரமாதமான கூட்டம் ஒன்றும் இருக்கவில்லை. காலை பத்து மணியளவில் விழா என்றதால் பல பெண்களுக்கு அடுப்பு வேலையை விட்டு வர இயலவில்லை போலும்.

அவளைப் போன்ற மேல் மட்டத்து வாசிகளான சில பெண்கள் வந்திருந்தனர். இல்லத்து ஊழியர்கள், இல்லத்தில் வசிக்கும் வயதான பெண்கள் எல்லாரையும் சேர்த்து எண்ணினால் ஐம்பதுக்கும் மேற்படாத ஒரு சிறு கூட்டம். விரைவாகப் பேச்சுக்கள் முடிந்ததும், எல்லோருக்கும் சிறு காகிதத் தட்டில் காரா பூந்தியும், பிஸ்கெட்டும் டம்ளரில் குளிர்பானமும் விநியோகிக்கப் பட்டன. அதற்குப் பின் தலைவியுடன் வந்திருந்தவர்கள் இல்லத்தைச் சுற்றிப் பார்க்க எழுந்தனர். இல்லத்தில் வசிக்கும் பெண்களை அவரவர் இடத்தில் கொண்டு



சேவகிகள் கையைப் பிடித்து அழைத்துச் சென்றுவிட்டு விட்டு வந்தனர்.

சில தனி அறைகள், படுக்கை வசதிகள், பெரியதொரு ஹால், சமையலறை என தனிக் கட்டடம் கொண்டதொரு அமைப்பு அது.

''சாதாரணமாக எல்லோருக்கும் பொதுவாக சாப்பாடும் படுக்கையும் இந்த ஹாலில்தான். ஆனால் சிலருக்கு - அவர்களது உடல்நிலை காரணமாக தனி அறை கொடுக்க ஏற்பாடு செய்திருக்கிறோம்'' என்று விளக்கியபடி இல்லத்தில் வசிப்பவர்களை அவர்களுக்கு அறிமுகம் செய்து கொண்டு வளைய வந்தாள் சிவகாமி.

''இந்தம்மாவுக்கு உடம்பு அத்தனை சரியாக இல்லை. சில நாட்களுக்கு முன் மாரடைப்பு லேசாக வந்தது. அதனால் தனி அறையில் வைக்க டாக்டர் உத்தரவு. இப்போது கொஞ்சம் தேவலாம்'' கட்டிலின் மீது தலையணையை உயர வைத்துப் படுத்துக் கொண்டிருந்த ஒரு வயதான பெண்மணி ஒருத்தியை அறிமுகப் படுத்தினாள்.

''துளசியம்மா உங்களைப் பார்க்க இவங்க வந்திருக்காங்க இப்படிப் பாருங்க'' சிவகாமி அன்பான குரலில் உசுப்பினாள்.

தும்பைப் பூவாக நரைத்த முடி, முதுமையில் தளர்ந்த முகமும், நோயில் பீடித்த உடலுமாகப் படுக்கையில் கிடந்த துளசி மெல்ல நிமிர்ந்து உட்கார்ந்தாள். சுற்றி நின்றவர்கள் எல்லோரையும் பார்த்தபடி துழாவிய அவளுடைய கண்கள் அனுபமாவின் முகத்தில் படிந்தபோது சில்லென்ற உணர்வில் அனுபமா ஆடிப் போனாள்.

''நீ, நீ, கமலா இல்லே... உன்னை... உன்னைத் தேடிக்கிட்டு...'' தன் பொக்கை வாயைக் காட்டியபடி குரூரமாக அவள் சிரிக்க உறைந்து போனாள் அனுபமா.

''அவங்க பேர் அனுபமா, கமலா இல்லே'' சிவகாமி சிரிக்க, கூடியிருந்தோர் முகத்திலே முறுவல் மலர மெல்ல அவர்கள் அந்த இடத்தை விட்டு வெளியே வந்தனர்.

''ஏய் கமலா! இங்கே வாடி... என்னை ஏமாத்திட்டுப் போயிடலாம்னு பார்க்காதே...'' திடீரெனப் பைத்தியக் காரியைப் போலக் கத்திய கிழவியைச் சேவகிகள் அமுக்கிப் படுக்க வைத்தார்கள். ''டாக்டரைக் கூப்பிட்டு ஊசி போடணும்.''

''இருங்க, பெரியவங்க என்ன சொல்றாங்கன்னு நான் கேட்கிறேன்'' பரபரப்பை வெளிக்காட்டாமல் அடக்கியபடி அனுபமா பேசவும் சேவகிகள் வெளியேறி விட்டனர்.

குற்ற உணர்வு உந்தக் கட்டிலருகில் நின்றாள் அவள். சிறிது தெம்புடன், ''ஏய் கிழவி என்ன உளர்றே'' கோபத்துடன் அதட்டினாள்.

''நான் உளறலே... எனக்கு உன்னை நன்றாக அடையாளம் தெரிஞ்சுட்டது. உனது வலது கன்னத்திலே... அந்த அழகு மச்சம்... அது ஒண்ணு போதாது? உன்னைத் தேடிக்கிட்டு நான் அலைஞ்சது... ஆண்டவனுக்குத்தான் தெரியும் - ஊரை விட்டே போயிட்டதாகக் கேள்விப் பட்டேன். எங்கே போனீங்கன்னு தெரியலே - ஆனால் எங்கேயும் போய் விடலை. இங்கே இருக்கேன்னு உன்னை சாமியே கொணர்ந்து விட்டுடுச்சு - பேரை மாத்திக்கிட்டா விட்டுடுவேனா? இரு - இரு. இந்தத் தலைவி அம்மாகிட்ட



உன்னைப் பத்திச் சொல்லி...'' கிழவி அந்த அவதியிலும் உறுதியாகப் பேசினாள்.

அனுபமா நெஞ்சுலர்ந்து போனாள். பயத்துடன் சுற்றுமுற்றும் பார்த்தாள். டாக்டருக்குப் போன் பண்ணப் போன சேவகிகள் திரும்பிய பாடில்லை. அருகே எவரும் இல்லாத துணிவுடன், ''என்ன வேணும் சொல்லித் தொலை'' அடிக்குரலில் அதட்டினாள்.

''அப்படி வா வழிக்கு. என் செல்ல மகளே. எனக்கு இந்த இல்லத்திலே இருக்க ஆசை இல்லை. ஒரு பெரிய ஆஸ்பத்திரியிலே வச்சு என்னைக் குணப்படுத்த ஏற்பாடு செய். பிறகு நான் கடைசி கால மட்டும் சுகமாகக் காலம் தள்ள ஒரு வாடகை வீடு வசதி செய்து கொடு'' கிழவியின் குரலில் சுருதி ஏறியது.

''இல்லாட்டி?''

''அந்தக் கடுதாசிகளை தலைவி கிட்டக் குடுப்பேன். இங்க வரவங்க கிட்ட உன்னைப் பத்திச் சொல்வேன், வலது தாடையில் அழகு மச்சத்தோட வந்தாளே, ஒரு அழகான பொண்ணு, பெரிய மனுஷன் வீட்டு பொண்ணு, அவ வேற யாருமில்லே, என் மகனோட காதலின்னு...''

''வாயை மூடிக்கிட்டுச் சும்மா கிட. சும்மா இருந்தா நீ கேட்டதெல்லாம் கிடைக்கும்'' மிரட்டலாகக் கூறினாள் அவள். ஆனால் திகிலும் அவமானமும் தாளாமல் குப்பென உடம்பு முழுவதும் வியர்வை பொங்கி வடிந்தது. கால்கள் தள்ளாட வெளியே வந்தாள்.

சிவகாமி அம்மாளிடம் ஏதாவது ஒரு கதை சொல்லி அந்தக் கிழவியை ஒரு ஆஸ்பத்திரியில் சேர்க்கச் சொல்லி விடலாம். அந்தச் செலவைத் தான் ஏற்றுக் கொள்வதாகக்

கூறிவிடலாம். துளசியம்மாள் கேட்ட மற்ற சலுகைகளைத் தொடர்ந்து செய்ய நன்றாகச் சிந்திக்க வேண்டும். எப்படி இந்த ஆபத்திலிருந்து தப்புவது?

காரில் ஏறி ஆசனத்தில் சாய்ந்து கொண்ட அனுபமாவின் நெஞ்சு படபடவென்று அடித்துக் கொண்டது. சேலத்திலே வசித்த துளசியம்மாள் இங்கே எப்படி வந்து சேர்ந்தாள்?

வீட்டை அடைந்து வண்டியினின்றும் இறங்கிய வளை மாமியார் வியப்புடன் பார்த்தாள்.

''ஆமாம், உன் உடம்புக்கென்ன? என்னவோ மாதிரி இருக்கே?''

''ஒண்ணுமில்லே. லேசாகத் தலைவலி'' - சுருக்கமாகக் கூறிவிட்டுத் தன் வீட்டுக்குள் புகுந்து கதவை மூடிக்கொண்டாள். ஆனால் கடந்த காலத்தின் மனக்கதவு 'ஆ' வென்று வாயைப் பிளந்து கொண்டு விட்டதுபோல் அவள் மறந்து ஒதுக்கிவிட நினைத்த சம்பவங்கள் குபுகுபு வெனப் பொங்கி வரத் துவங்கி விட்டனவே? கோர்வையாகப் பீறிட்ட நினைவுகளை மறக்க, குளியல் அறைக்குழாயைத் திருப்பிப் பச்சைத் தண்ணீரில் பலமுறை முகத்தைக் கழுவிக் கொண்டாள்.

பின்னர் அவசரமாக வீட்டு வேலைகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டாள். துவைத்துக் காயவைத்த துணிகளை வேலைக்காரியிடம் கொடுத்து நடமாடும் இஸ்திரி வண்டிக்காரனிடம் பெட்டி போடச் சொன்னாள். அவற்றைப் பிற்பாடு பீரோவில் அழகாக அடுக்கினாள். இரவுச் சாப்பாட்டுக்குத் தேவையானவற்றைச் சமையற்கார அம்மாளிடம் கூறினாள். தாறுமாறாகக் கிடந்த புத்தக



அலமாரியை ஒழுங்குபடுத்தினாள். 'ஹோஸ்' பைப்பை எடுத்துத் தோட்டத்துக்கு நீர் பாய்ச்சினாள்.

பள்ளியிலிருந்து திரும்பிய குழந்தைகள் இருவரையும் குளிக்கச் செய்து மாற்றுடை அணிவித்து, வாயில் வராந்தாவில் காத்திருந்த 'டியூஷன்' உபாத்தியாயரிடம் அனுப்பி வைத்தாள். பூஜை அறை விளக்கை ஏற்றினாள்.

பொழுது மங்கும் நேரம். வேலையிலிருந்து வந்த கணவனுக்குத் தன் கையாலேயே சூடாகக் காப்பி கலந்து தந்தாள்.

**அ**ன்றிரவு சாப்பாட்டு அறையில் சமையற்கார அம்மாள் சிரமப்பட்டுத் தயாரித்திருந்த சப்ஜியையும் சப்பாத்தியையும் அவள் ஏறெடுத்துப் பார்க்க முடியாத அளவு பசி குன்றிப் போய்விட்டிருந்தது. சப்பாத்தி தொண்டையில் முள்ளாகக் குத்தியது. சப்ஜி எட்டிக் காயாகக் கசந்தது.

நாள் முழுவதும் ஓடியாடிச் செய்த வேளையின் களைப்பில் அவள் கணவன் தலையணை மீது சாய்ந்தவுடன் விரைவில் உறங்கிப் போனான். குழந்தைகள் வெகு சீக்கிரமாகப் படுக்கச் சென்று விட்டனர். பொழுது நடு இரவைத் தாண்டியும் கூட அவள் கண்கள் தூங்க மறுத்தன. அருகில் லேசாக - மூச்சு விட்டபடி ஆழ்ந்து உறங்கிக் கொண்டிருந்த கணவனைக் குற்ற உணர்வுடன் பலமுறை, 'ஜீரோ வாட்' வெளிச்சத்தில் பார்த்தாள்.

நெஞ்சு தீவிரமாகத் துடித்தது. ஏ.சி. அறையில் கூட அவளுக்கு வேர்த்துக் கொட்டியது.

காசாம்பூ கருணை இல்லத்தில் தங்கியிருக்கும் அந்தப் பொல்லாத கிழவி துளசி ஏதாவது உளறித் தொலைத்து விட்டால்...?

கடந்த காலத்தில் நடந்த அந்த விபரீத நிகழ்ச்சி அவளது உறவினருக்குத் தெரிந்து விட்டால்?...

ஒரு சமயம் மூத்த மருமகள் பத்மா, மாமியாரிடம் சொல்லாது சினிமாவுக்குத் தோழியோடு போய்விட்டு வந்ததை, இரண்டு வாரத்தில் துப்பறிந்து கொண்டுவிட்ட அலமேலு அவளைப் படுத்திய பாடு... எல்லோர் முன்னிலையிலும் நிறுத்தி வைத்து, ஏதோ தகாத குற்றம் செய்து விட்டதைப்போல எப்படித் துச்சமாக பேசிக் கண்டித்தாள்? சினிமாவுக்கே அத்தனை ஆர்ப்பாட்டம் செய்த மாமியார் அந்தக் கடந்த காலத்தைத் தெரிந்து கொண்டுவிட்டால்...

ஐயோ அந்த அவமானத்துடன் அவள் எப்படித் தலை நிமிர்ந்து நடக்க முடியும்? ஒரு சமயம் தன் பிள்ளையிடம் கண்டிப்பாகப் பேசி அவளை விவாகரத்து செய்துவிடும் படி நிர்ப்பந்தித்தாலும் அதிசயப்படுவதற்கில்லை.

ஓரகத்திகள் நான்கு பேரும் அவள் வெளியேற்றப் படுவதைப் பார்த்து நகைப்பது போன்ற கற்பனையில் உடல் நடுங்க பதறிப்போய் எழுந்து உட்கார்ந்தாள். நெஞ்சு வெடித்துச் சுக்கலாகி விடுவதுபோல் அடித்துக் கொண்டது. அவளது பிறந்த வீட்டில் அவளது பெயர் கமலா. கல்யாணத்தின்போது மாமியார்தான் அனுபமா என்று மாற்றி வைத்தாள். சிறு வயதிலேயே இறந்து போன தன் மகள் கமலாவின் பெயர் வேண்டாம் என்பதனால்தான் "அனுபமா" என்று மாற்றி வைக்கப்பட்டது என்பது அனுபமாவுக்குத் தெரியும்.



ஆனால் அந்தப் பொல்லாத கிழவி இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகும் அவளை அடையாளம் கண்டுகொண்டு விட்டாளே!

அப்பாவுக்கும், அவளை வளர்த்து ஆளாக்கிய அத்தைக்கும் தெரியாத சங்கதியை அவள் இப்போது அம்பலப்படுத்தி விட்டால்?

பங்கஜா பிளாஸ்டிக்ஸ் வீட்டுப்பெண். சமூகத்தில் உயர் மட்டத்து மருமகள் என்ற அந்தஸ்து அடிமட்டத்துக்கு அல்லவா போய்விடும்?

புகழ்ந்து நாலு பேர் பேசாவிட்டாலும் பரவாயில்லை. இகழ்ந்து பேசுவதைக் கேட்டுக் கொண்டு அவள் எப்படி உயிருடன் இருப்பாள்?

பரிந்து பேசும் அத்தையும் இப்போது உயிருடன் இல்லை. அப்பா காலமான பிறகு இப்போது அண்ணன் அண்ணி இருவரின் தயவில் அடங்கி ஒடுங்கிவிட்ட பிறந்தகம்.

எந்த முகத்தோடு அங்கே போய் நிற்க முடியும்? ஐயோ அவள் என்ன செய்வாள்? மற்ற ஓரகத்திகளுக்கு மேல் தான் ஒருபடி உயர்ந்தவள் என்பதைக் காண்பித்துக் கொள்ளப் புனிதவதி மாதர் சங்கத்தில் ஒரு உறுப்பினராக சேரப்போய் முதியோர் கல்வி, ரத்த தானம், வைத்திய முகாம் என்று சேவகியாகக் கலந்து கொண்ட பெருமையில்... இப்போது பல நன்கொடைகளின் மூலம் பாடுபட்டு உருவாக்கிய கருணை இல்லத்து ஆண்டு விழாவில் கலந்து கொள்ளப்போய்... அனுபமாவுக்கு அழுகை குமுறியது.

குழிதோண்டிப் புதைத்த சங்கதிகள், பூகம்பமாக வெடித்துக் கொண்டு அவள் வாழ்வை உருக்குலைக்கப் போகிறது. அழுகையை அடக்கப் படுக்கையில் புரண்டவளுடன் கடந்த காலமும் புரண்டு கொடுத்தது.

பதினாறு வயதைத் தாண்டிவிட்ட பருவ வயது. அருகிலிருந்த கல்லூரியில் கால் வைத்த இளம் பருவம். சிறு வயதிலேயே அம்மாவை இழந்து விட்டதனால் அண்ணன் வீட்டோடு தங்கிவிட்ட விதவை அத்தையின் பாதுகாப்பில் வளர்ந்தவள் அனுபமா. அண்ணன் ஐ.ஐ.டி.யில் பட்டப் படிப்பு. ஹாஸ்டல்வாசி. லீவின் போது சேலம் வருவான். அப்பா வியாபார விஷயமாக அடிக்கடி வெளியூர் போய் விடுவார்.

அத்தைக்கோ வீட்டைக் கவனிக்கவும், சமைக்கவும் எஞ்சிய பொழுதில் கோவிலுக்குப் போகவும் தான் சரியாக இருந்தது. உணர்வுகள் பொங்கிப் பெருகும் இள வயது. புதிய அனுபவங்களைப் புரிந்து கொள்ள முனையும் பருவம். கல்லூரியிலும் கதைப் புத்தகமும், தனிமையும் அவளைச் சூழ்ந்திருந்தன.

அறையின் நான்கு சுவர்களையும், டிரான்சிஸ்டர் ரேடியோவின் துணையையும் பழகி அலுத்து விட்டிருந்தாள். அது சமயம்தான் அவர்கள் வீட்டுக்குப் பின் பக்கத்து தோட்டத்து 'பம்ப்' செட்டைப் பழுது பார்க்க நகரத்துக் கடையிலிருந்து அவன் வந்திருந்தான்.

இருபது வயதிருக்கலாம். மாநிறம் - ஒடிசலான இளைஞன் புஸ்ஸென்ற கிராப்புத் தலை. தொங்கு மீசை.

அப்படிப் பார்ப்பதற்கு ஒன்றும் மன்மதன் இல்லை. படித்தவனும் இல்லை. எஸ்.எஸ்.எல்.சி.யில் இரண்டு



தடவை தோற்றவன் என்று அறிமுகப்படுத்திக் கொண்டான்.

தன்னையும் தன் தாயையும் காப்பாற்றிக் கொள்ள ஏதாவது ஒரு வேலை செய்தாக வேண்டுமே? அதனால் தான் நகரத்து பம்ப்செட் ரிப்பேர் கடையில் ஒரு ஆளாகச் சேர்ந்து வேலை பார்ப்பதாகச் சொல்லிக் கொண்டான்.

ஏன் அவளுக்கு அவன் மேல் இரக்கம் ஏற்பட்டது என்பது அவளுக்கே தெரியாது.

''பாப்பா! கொஞ்சம் தண்ணி குடுப்பியா?'' என்று கேட்டான். பரிதாபப்பட்டுக் கொண்டு குளிர்ப் பெட்டியைத் திறந்து தண்ணீரைத் தம்ளரில் ஊற்றிக் கொடுத்தாள்.

அத்தை வீட்டில்தான் இருந்தாள். ஊஞ்சலில் உட்கார்ந்தபடி கந்த புராணத்தைப் படித்துக் கொண்டிருந்தாள். அவர்களைக் கவனிக்கவில்லை.

பம்பு செட் ரிப்பேர் செய்த மூன்று நாளும் மாலை அவன் கிளம்பு முன் ''பாப்பா, தண்ணி குடுப்பியா?'' என்று கேட்க மறக்கவில்லை.

முதல் நாள் பவ்யமாக வாங்கிக் குடித்தவன் அடுத்த நாள் அவள் விரலைத் தொட்டு வாங்கிக் கொண்டான். அதற்கு அடுத்தநாள் அவள் அத்தை பாராதபோது கையை தொட்டுப் பிடித்து, அவள் காதில் மட்டும் கேட்கும்படி, ''நீ ரொம்ப அழகான பொண்ணு'' என்று கிசுகிசுத்து விட்டுப் போனான்.

தூக்கிவாரிப் போட்டது அவளுக்கு. ஆனாலும் அந்தப் புகழ்ச்சி இனித்தது. இதுவரை அவளை எவரும்

அப்படிப் புகழ்ந்ததில்லை. ஒரு வாலிபன் அப்படிக் கூறியபோது ஒரு ஈர்ப்புச் சக்தி இருக்கத்தான் இருந்தது. சில தினங்களுக்குப் பின் அவளது விலாசத்துக்கு ஒரு கடிதம் வந்தது.

அவன்தான் துணிவுடன் எழுதியிருந்தான். அவளைக் காதலிப்பதாகவும் சந்திக்க விரும்புவதாகவும் எழுதியிருந்தான்.

பதைபதைத்துப் போனாள் அவள். அத்தையிடமோ அப்பாவிடமோ கடிதத்தைப் பற்றி மூச்சு விடவில்லை. கடிதத்தைப் படிக்கப் படிக்க ஏனோ ஒருவிதப் பெருமிதமும் கூடவே ஏற்படத்தான் செய்தது. அவளது அன்புக்காக, அவளோடு பேச, அவளை ஒருமுறையாவது பார்க்க வேண்டும் என்று ஓர் இளைஞன் துடியாகத் துடிக்கிறானே. அவனை அப்படி ஏங்க வைக்கும் அளவுக்கு அவளிடம் ஒரு காந்த சக்தி இருக்கிறதா? அதை மேலும் பரிட்சை செய்து பார்த்தாள்...?

விளையாட்டுத் தனத்தில் விளைந்த துணிவில் அவள் விஷப் பரிட்சையில் இறங்கினாள். பதில் கடிதம் எழுதினாள். அவன் கூறியபடி பஸ் நிலையத்தில் சந்தித்தாள். எவரும் பாக்காதபடி அவனுடன் மெல்ல நடந்து சென்று அருகிலிருந்த பார்க் பெஞ்ச் மீது, ஒரு செடி மறைவில் உட்கார்ந்து அரட்டை அடித்தாள். அவன் கூறிய அசட்டு ஜோக்குகளைக் கேட்டு விழுந்து விழுந்து சிரித்தாள்.

முதலில் வேடிக்கையாகப் பொது விஷயங்களைப் பற்றித்தான் பேசினான். பின்னர் தன்னைப் பற்றியும் தன் தாயைப் பற்றியும் அவள் மனம் நெகிழ்ந்து போகும் வண்ணம் பல துன்பக் கதைகள் சொன்னான்.



வெட்டியாக வீணாகிப்போனதாக இருந்த பொழுது இப்பொழுது சுவாரஸ்யமாகப் போனது. அவன் ஏழை - ஆனால் நல்லவன், பாவம் என்றுதான் அவள் மனம் அவனுக்காகப் பரிதாபப்பட்டது. அந்த இரக்கத்தின் காரணமாக - அப்பா பார்த்தால் சுட்டுப் பொசுக்கி விடுவார் என்கிற பயத்தை மறந்து - அத்தை ஒருத்தி இருப்பதை நினைக்காது அவன் வேண்டுகோளைத் தட்டாது, கடிதங்கள் எழுதினாள். தினமும் தொடர்ந்து சந்தித்தாள்.

ஒருநாள் கல்லூரி முடிந்ததும் வழக்கமான சந்திக்கும் இடத்தில் அவன் திடுமெனக் கூறினான்:

''இன்னைக்கு நான் ஒரு முடிவுக்கு வந்திட்டேன். நம் ரெண்டு பேரும் எங்கேயாவது ஓடிப் போய்க் கல்யாணம் செய்துகிட்டுக் கணவன் மனைவியாயிடணும்.''

அவள் திடுக்கிட்டுப் போனாள். அவர்கள் அந்தஸ்தென்ன - ஒரு கடையில் எடுபிடி ஆளாக வேலை பார்க்கும் அவன் தகுதி என்ன? நட்பு அன்பு என்று பேசியவன், கல்யாணம் வரை கணக்குப் போடுவான் என அவள் எதிர்பார்க்கவில்லை.

அவள் வயிற்றைக் குமட்டிய அருவருப்புடன் அவனை உருட்டி விழித்தாள். ''ஏய், நீ ரொம்ப அதிகமா ஆசைப்படறே. எங்கப்பா காதில் பட்டால் உன் முதுகுத் தோலைப் பிச்சு வாங்கிடுவார்'' என்றாள் பயமுறுத்தலாக.

''ஆசை காட்டி மோசம் பண்ணவா பாக்கறே, நான் யார்னு பிறகு புரிஞ்சுக்குவே. இப்ப மரியாதையா என்னோட வரியா, இல்லாட்டி...'' அவள் கரத்தைப்

பற்றிப் பூங்காவின் இருண்ட பகுதி ஒன்றின் பக்கமாக இழுத்தான்.

புலிபோல வெகுண்டெழுந்த அவள், "சீ விடுடா நாயே. படுவா ராஸ்கல் - பாவம்னு பார்த்தா இப்படி ஒரு ஆசையா - உன் முகரக்கட்டைக்குக் கல்யாணம் வேறயா?" கையை உருவி ஓங்கி அவன் கன்னத்தில் அறைந்தாள். அடுத்த விநாடி ஓட்டமும் நடையுமாக மின்னல் வேகத்தில் வந்து நின்ற பஸ்ஸில் பாய்ந்து ஏறிக்கொண்டு விட்டாள்.

வீட்டை அடைந்ததும் அவளின் பயங்கர அதிர்ச்சி ஓயவில்லை.

அதற்கு அடுத்த நாள் அவள் பெயருக்கு ஒரு கடிதம் வந்தது.

"இந்தச் சிங்காரம் இதற்கெல்லாம் ஏமாந்தவன் இல்லை. நீ எழுதின கடிதங்களுடன் உன் அப்பனிடமே வந்து பெண் கேட்கிறேன் பார். கொடுக்க மறுத்தால் உன் குடும்ப மானமே கப்பலில் ஏறப்போவது உண்மை."

அடுத்த சில நாட்களில் பயத்தினால் காய்ச்சல் என்று கல்லூரிக்குப் போகாமல் வீட்டோடு முடங்கிக் கிடந்தாள். அந்தச் சில நாட்களில் அவள் பட்ட சித்ரவதை. வாயில் அழைப்பு மணி ஒலித்தால் அரண்டு போவாள். தன் அறைக்குள் மறைந்துகொண்டு மெல்ல ஜன்னல் வழியே எட்டிப் பார்த்துத் தவித்துப் போவாள்.

'இன்று வருவானோ - நாளை வருவானோ? ஒரு சமயம் அப்பாவை ஆபீசுக்குப் போய் மிரட்டுவானோ - நெருப்போடு விளையாடக்கூடாதுன்னு அத்தை



சொல்வாங்களே - சரியாய் போச்சே. சிங்காரம் ஒரு பெரிய நெருப்பு. வேடிக்கையாக அவனைத் தூண்டிவிட்டு வேடிக்கை பார்க்கப் போய் இப்போது வேதனையாகி விட்டதே' நடுநடுங்கிக் கொண்டு இருந்தாள்.

அன்று அவள் அப்பா பம்ப் செட் ரிப்பேர் கடைக்காரருக்குப் போன் செய்ததைக் கேட்டவள் கிலியினால் ஆடிப் போனாள்.

பகீர் என்ற உணர்வில் உடல் வியர்த்து நெஞ்சு பதற நாக்கும் தொண்டையும் வறண்டு போகத் தன் அறைக்குள் இருந்தபடியே உற்றுக் கேட்டாள்.

"இரண்டு மாசத்துக்கு முன்னாடி ரிப்பேர் செய்ய அனுப்பினீங்களே - சிங்காரமா அவன் பேரு - அவனைக் கொஞ்சம் அனுப்பமுடியுமா? என் நண்பர் வீட்ல பம்ப் செட் ரிப்பேர் செய்யணும்."

காதைத் தீட்டிக் கொண்டாள் அனுபமா.

"என்ன சொல்றீங்க? அவன் செத்துப் போயிட்டானா? காமாலை ஜுரத்திலே திடீர்னு போயிட்டானா? அடடா" போனை வைத்தார்.

"அக்கா கேட்டீங்களா கதையை - இங்கே வந்து நம்ப பம்ப் செட்டை ரிப்பேர் செய்து கொடுத்தானே அந்தப் பையன் ஜுரத்திலே செத்துட்டானாம்...

"தாய்க்கு ஒரே பிள்ளையாம். பாவம்" சூள் கொட்டினார்.

"அடபாவமே, அவன் உண்டு அவன் வேலை உண்டு என்று அடக்கமா இருந்தானே, சாதுப் பையன்

அவனுக்கு இப்படி ஒரு சாவா -'' அத்தை அனுதாபப் பட்டாள். ஆனால் உண்மையில் அந்தச் சங்கதியைக் கேட்டதும் சந்தோஷப்பட்டவள் அனுபமா ஒருத்திதான்.

காதல் என்று பேத்திவிட்டுக் கல்யாணம் செய்து கொள்ள வற்புறுத்துமளவுக்குத் திமிர்பிடித்த கழுதை - அவனுக்கு காமாலை வந்து செத்தால் என்ன - கழுத்தறு பட்டுச் செத்தால் என்ன? மனதில் நிம்மதி பிறந்தது. ஆனால் அந்த நிம்மதி ஒருசில நாட்களுக்குத்தான் என அவள் அப்போது உணரவில்லை.

சில நாட்களுக்குப் பின்னர் பரிட்சை முடிந்து போன சமயம் வாயிலில் அழைப்பு மணி ஒலித்தது! தனியாக இருந்த அவளுக்குச் சிறிது பயமாக இருந்தது. கதவுத் துவாரம் வழியாக வெளியே பார்த்தாள்.

முன்பின் தெரியாத ஒரு வயதான பெண்மணி - கிழிந்த ரவிக்கையும் - அழுக்குப் புடவையும் பரட்டைத் தலையுமாக வாயிலில் நின்றிருந்தாள். 'பிச்சைக்காரி போலும்' கோபமாகக் கதவைத் திறந்தாள் அவளை விரட்ட.

''உள்ளே வந்து பேச விரும்பறேன் உனக்கு என்னைத் தெரியாது. ஆனால் எனக்கு உன்னைத் தெரியும். என் மகன் சிங்காரத்தோட காதலிதானே நீ?''

கால்கள் தரையில் ஊன்றிக் கல்லாகிப் போன அதிர்ச்சி. சமாளிக்க முயன்றவளாய்,

''சே என்ன உளருகிறே... வேலையாளைக் கூப்பிட்டுக் கழுத்தைப் பிடித்துத் தள்ளச் சொல்லிடுவேன். பிச்சை எடுக்க இப்படி ஒரு கதையா?'' சீறினாள் கோபமாக.



''கதையா அம்மா கமலா? நீ என் மகனுக்கு எழுதின காதல் கடிதாசி எல்லாம் என்கிட்ட இருக்கு. பார்த்தா பிச்சைக்காரியாவா தெரியறேன்? நான் பள்ளிக்கூடத்திலே ஆயா வேலை பார்த்தவ. எனக்கும் படிக்கத் தெரியும். இந்தக் கடிதாசிகளை உன் அப்பன்கிட்டக் காட்டினா என்ன ஆகும் தெரியுமா? ஊர்ல நாலு பேர்கிட்டக் காட்டினா உன்னைத் துணிஞ்சு எவன் கட்டுவான்? கள்ளம் கபடமில்லாத என் மகனுக்கு ஆசை காட்டி, உன் பணத் திமிராலே, மோசம் செய்த திருடி நீ.''

எச்சிலை விழுங்கிக் கொண்டாள் அனுபமா.

''இப்போ நீ எதற்காக வந்திருக்கே - அந்தக் கடிதாசுகளைக் காட்டு பார்க்கலாம்.''

''என் மகன் செத்த பிறகுதான் எனக்கே இந்தக் கடிதாசுகளைப் பத்தின விவரம் தெரிஞ்சது. அவன் ஏற்கெனவே உன்னைப் பத்தின விவரம் சொல்லி யிருக்கான். அவன் பெட்டியில் பத்திரமா இந்தக் கடிதாசிகளை வச்சிருக்கான்னு அது இப்ப எனக்கு உதவியா இருக்குன்னு நினைக்கிறேன்.''

''சுத்தி வளைக்காதே. கடுதாசிகளைக் காட்டிட்டுப் பேசு.''

''அப்படியே வாங்கிக் கிழிச்சுப் போட்டுடலாம்னு கனவு காணாதே.''

''பயமுறுத்தலா? போலீஸ்ல பிடிச்சுக் குடுப்பேன்.''

''குடு. உன் காதல் கதையை ஊர் முழுக்கப் பரவவிடறேன். காரும் பங்களாவுமா வாழற பெரிய

மனுஷன் மகள் - கீழ் ஜாதியைச் சேர்ந்த குடிசைவாசி மகனோட ஓடத்தயாரா இருந்திட்டாள்னு ஊரே பேசிச் சிரிக்கட்டும்'' உரக்கச் சிரித்தாள் அந்தப் பொல்லாதவள்.

அனுபமா வெடவெடவென்று நடுங்கினாள். அத்தை கடைத் தெருவிலிருந்து திரும்புமுன் இவளை அனுப்ப வேண்டுமே! உண்மை, அவள் சொல்வதெல்லாம் உண்மை. விஷயம் தெரிந்தால் உறவினர்கள் கை கொட்டிச் சிரிப்பார்கள் - ஊரே கொல்லென்றாகிவிடும்.

''எத்தனை வேணும்? சொல்லித் தொலை'' சீறினாள்!

''இரண்டாயிரம் இப்பப் போதும், கண்ணு.''

''ஐயோ! இரண்டாயிரமா?''

''என்ன செய்வியோ தெரியாது. எனக்குப் பணம் தேவை. இல்லே நான் அசைய மாட்டேன்.''

உள்ளே ஓடிப் பரபரப்பாக பீரோவை ஆராய்ந்தாள். பிறந்த நாள் பரிசாக அப்பா கொடுத்த பணம், மூன்று நூறு ரூபாய்த் தாள்கள். நகைப் பெட்டியில் இருந்து ஒரு நெக்லஸை வெடுக்கென்று பறித்துக்கொண்டு வேகமாக வந்தவள் ''இதுதான் என்கிட்ட இருக்குது, இனி இந்தப் பக்கம் தலை வச்சுப் படுக்காதே - அடுத்தவாட்டி வந்தே - ஆமாம்...'' பற்களைக் கடித்தபடி அவளிடம் தந்து, கழுத்தைப் பிடித்துத் தள்ளாத குறையாக வெளியே தள்ளிவிட்டாள்.

தானாகவே வலியப் போய் இப்படி ஒரு அயோக்கியக் குடும்பத்தில் சிக்கிக் கொண்டு விட்டோமே.



முதலில் மகன். இப்போது தாயார் பூதம் போலப் புறப் பட்டிருக்கிறாளே.

அவள் நிம்மதி இல்லாமல் தவித்தாள்.

சங்கிலியுடன் புறப்பட்டுப் போன பெண்மணி தன் விலாசம் எல்லாம் தந்துவிட்டுத்தான் போனாள். ''இன்னும் ரெண்டு மாசம் பொறுத்து ஒரு ஆயிரம் ரூபாய் கொணாந்து நீயே குடுத்துடு. அதுக்குப் பிறகு அடிக்கடி நான் வரமாட்டேன்'' பேய் போலச் சிரித்தாள்.

துளசியம்மாள் - கன்னியப்பன் தோட்டம், நாலாவது எண் வீடு. கனவில் கூட துளசியும், குடிசைப் பகுதியும் அவளைப் பயமுறுத்தின. எத்தனையோ முறை அப்பாவிடம் சொல்லிவிடலாமா என்று யோசித்தாள்.

இடுப்புப் பெல்ட்டைக் கழட்டிக் கொண்டு முதுகைப் பதம் பார்த்து விடுவார். அத்தனைக் கோபக்காரர். அத்தையிடம் சொல்லி என்ன பயன்? ஓவென்று வாய்விட்டு ஊரைக் கூட்டிவிடும் பத்தாம் பசலி. வேறு என்ன வழி? ஐயோ... தவித்துத் தவித்து உணர்வுகள் குழம்பி, உடம்பு இளைத்துப் பேயடித்தவள் போல எப்படி மாறிப் போனாள்...

இந்தச் சமயம்தான் அப்பா அந்த வேலையை விட்டு விட்டுச் சென்னையிலிருந்த வேறு பெரிய நிறுவனத்தில் வேறு ஒரு வேலை தேடிக்கொண்டார்.

வீட்டையும் விற்று விட்டுக் கிளம்பி விட்டார். அந்தப் பொல்லாத துளசி கேள்விப்பட்டு சென்னைக்கே வந்து விட்டால்! ஆயிரம் ரூபாயுடன் துளசி கொடுத்து

விட்டுப்போன விலாசத்தைத் தேடிக் கொண்டு போனபோது குடிசைகள் அகற்றப்பட்டு அந்த இடமே உருமாறிப் போய் விட்டிருந்தது. புதியதொரு குடியிருப்பு வாரியம் உருவாகி விட்டிருந்தது.''

''துளசியா? அவுங்க எங்கே போனாங்களோ, சமீபத்தில் இங்கே நெருப்புப் பிடிச்சது. அப்பக் காலி பண்ணிட்டுப்போனவங்களா இருக்கும்.

அனுபமா ''விட்டது பீடை'' என்று சமாதானமாக வீடு திரும்பினாள்.

சென்னையில் அவர்கள் குடியேறி அண்ணன் தலையெடுக்கத் துவங்கிய கையோடு - அவளுக்கும் கல்யாணம் ஆகியது.

அப்பா வேலையிலிருந்து, ஓய்வு பெற்ற பின் அந்தப் பெரிய இடத்தில் மகளைக் கல்யாணம் செய்தாகிவிட்டது. கடமைகள் தீர்ந்த மகிழ்ச்சியில் முதலில் அத்தையும் பிறகு அப்பாவும் ஒரே வருஷத்தில் இறந்து போனார்கள்.

பின்னர் அனுபமாவுக்கு ரவி பிறந்தான். பின்னர் குழந்தை ராதா பிறந்தாள். வருஷங்கள் ஓடிமறைந்தன.

இத்தனை காலத்துக்குப் பின்னர் அந்த சம்பவத்தை முழுதும் மறந்து கண்ணியமான இல்லத்தரசியாக - ஓரகத்தி, மைத்துனர், மாமனார், மாமியார் என வாழ்ந்து கொண்டிருந்த வேளையில் நீல வானத்திலிருந்து திடுமென நெருப்பாக வீழ்ந்த இடிபோல் அந்தத் துளசிக் கிழவியைச் சந்திக்கப் போகிறோம் என்று கனவில்கூட நினைக்காத அவளுக்கு எத்தனை பெரிய அதிர்ச்சி?



கிழவி அடையாளம் கண்டு கொண்டுவிட்டாளே?

மறுநாள் காலை கணவன் அலுவலகம் சென்றதும் அவள் வீட்டு வேலைகளில் மனதைச் செலுத்த முற்பட்ட போது தொலைபேசி அலறியது.

உள்ளுணர்வில் காரணமற்ற ஒரு எச்சரிப்பு. கலவரத்துடன் ரிசீவரை எடுத்தாள். மறு பக்கத்தில் காசாம்பு இல்லத் தலைவியின் குரல் உரக்க ''ஹலோ'' என்றது.

திகிலில் காய்ந்து போன உதட்டை நாவால் தடவிக் கொண்டாள் அனுபமா.

''மிஸஸ் அனுபமாதானே? காலை வேலையில் தொந்தரவு செய்யறதுக்கு மன்னிக்கணும். அதிர்ச்சி தரும் செய்தியை ஏன் சொல்லணும்னு...''

அனுபமா இயந்திர கதியில் ''சொல்லுங்க'' என்றாள்.

''நேத்து ராத்திரி அந்த வயதான அம்மாளுக்குக் காய்ச்சல் வேறு வந்துவிட்டது. காலையில் அவளை நீங்க ஆஸ்பத்திரியில் அனுமதிக்க உதவி செய்வீங்கன்னு தைரியமா இருந்தோம். காய்ச்சலில் ஒரே பேத்தல்....''

அனுபமா மௌனமாகிப் போனாள்.

தலைவி தொடர்ந்தபடி 'கடுதாசிங்களையெல்லாம் அந்தக் குடிசைத் தீயில் பறிகொடுத்திட்டேன். என் சொத்தெல்லாம் போச்சேன்னு அழுது புலம்பிக்கிட்டே இருந்தாங்க. ஏதோ உயில் விஷயமோ என்னமோ ஏதானும்

ரசீதோ என்னவோன்னு அந்த அம்மா பெட்டியைத் திறந்து பார்த்தோம்.''

''பிறகு?''

''ஏதோ ஒரு வாலிபனோட போட்டோ சோப்புப் பெட்டி, பழைய துணி இதுதான் இருந்தது. அவளது உறவினர் என்று யாரும் இல்லை. நடு இரவு ஒரு பலத்த 'ஹார்ட் அட்டாக்', டாக்டர் உதவிவரும்முன் போய்ட்டா போகும்போது 'கமலா, கமலா'ன்னு முணுமுணுத்தாளாம். பாவம் யாரோ அந்தக் கமலா.''

''என்ன சொல்றீங்க. அந்தக் கிழவி துளசியம்மா இறந்துட்டாங்களா?''

''ஆமாம். தாங்க்யூ மிஸஸ் அனுபமா. நீங்க நல்ல மனசோட அந்தம்மாளுக்கு உதவி செய்ய விரும்பினீங்க. ஆனால் பாவம் அவள்தான் கொடுத்து வைக்கலை.''

காதோரம் வழிந்த வியர்வையைச் சட்டெனத் துடைத்துக் கொண்டாள் அவள்.

என்ன அதிசயம்! அந்தக் கடிதங்கள் எப்போதோ அக்கினி பகவானின் பசிக்கு அர்ப்பணமாகி விட்டிருக் கின்றன. அக்னிதேவன் அவர்களது ரகசியத்தை வெளியே தெரியாமல் கபளீகரம் செய்துவிட்டானோ, பொல்லாத கிழவி, இன்னமும் அவளைப் பொய்யாகப் பயமுறுத்த விரும்பியதால் இந்தத் திடீர் முடிவு ஏற்பட்டதோ?

''அவளுக்காகப் பரிதாபப்பட்டு உதவணும்னு நீங்க நினைச்சீங்க. ஹார்ட் கேஸ், வயசுப் பிராணம் பொசுக்னு போயிடுச்சி, இதுதான் எங்க ஹோமின் முதல் சாவு.''



''அப்படியா! ஒண்ணு செய்யுங்க. அந்தம்மாளை அடக்கம் செய்ய ஆகிற செலவை நான் நன்கொடையாகக் கொடுத்திடறேன். ஒரு இருநூறு போதுமா?''' அனுபமா நிம்மதியுடன் கேட்டாள்.

''ரொம்ப நன்றி.'' போனை வைத்தவள் உடனடியாக இருநூறு ரூபாய்களை அனுப்பி வைத்தாள் வேலையாள் மூலம். அப்பாடா! அவளது ரகசியம் புதைபட்டுப் போனது.

''அனுபமா இங்கே வா'' மாமியாரின் அதிகாரக்குரல் வராந்தாவிலிருந்து அழைத்தது. வேகமாக அங்கே சென்றாள்.

''இந்தக் கோகிலா என்ன செய்தாள் தெரியுமா? பஸ் நிலையத்தில் ஒருத்தனோட பல்லை இளிச்சிண்டு நின்னிட்டிருந்தா. நல்லவேளை நான் பார்த்திட்டேன். உடனே காரை நிறுத்தி வீட்டுக்கு அழைச்சிட்டு வந்திட்டேன்.''

''நல்லவேளை செய்தீங்க'' என்று அனுபமா திருதிருவென்று விழித்தபடி சுவர் ஓரமாக நின்ற மூத்த மைத்துனர் மகள் பதினான்கு வயது கோகிலாவை அணுகி அன்புடன் அணைத்துக் கொண்டாள்.

''பாட்டி சொல்றதிலே நியாயம் இருக்கும்மா. உலக அனுபவப்பட்டவங்க. பெரியவங்க, அவங்க சொல்றதைக் கேட்கணும். இப்படிக் கண்டவனோட நின்னு பேசிக் கிட்டிருந்தா பின்னால் பெரிய ஆபத்துல கொண்டு விட்டுடும். இப்ப உனக்குச் சொன்னாப் புரியாத வயசு இது'' என்றாள் இதமாக.

"நீயே புத்தி சொல்லு. நான் சொன்னா அவளுக்கு உறைக்க மாட்டேங்குது" உத்தரவிட்டாள் அலமேலு.

"உன்னைப் போன்ற வயதில் செய்த தப்பின் விளைவாக நேற்றுவரை சித்திரவதைப்பட்ட என் அனுபவத்தை சொல்லவா, கோகிலா! வெய்யில் காலத்துல வர்ற மேகங்களால் ஒரு பிரயோஜனமும் இல்லை. பெய்யற மழையும் நிமிஷத்திலே நின்னுடும். அது மாதிரித்தான் இந்த அனுபவங்களும்.' மனதுக்குள் கூறியவளாய் அந்தச் சின்னப் பெண்ணைத் தன்னோடு அன்புடன் சேர்த்து அணைத்தபடி உள்ளே சென்றாள் அனுபமா.

★ ★ ★